ADLC/IN/3503/2022

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
மாணவர் உதவி மற்றும் முன்னேற்ற மையம்

AU/ /SSP/2022

**நாள்**:26.09.2022

## சுற்றறிக்கை

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் மாணாக்கர்கள் 2022-2023ஆம் கல்வியாண்டில் சேர்க்கைபெறும் மாணாக்கர்கள் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை / உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை / முதல் தலைமுறை பட்டதாரி உதவித்தொகை / மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவதற்காக விண்ணப்பிக்கும் மாணாக்கர்களின் பெயரில் வங்கிக்கணக்கு அவசியமாக்கப்பட்டுள்ளது. வங்கிக்கணக்கை தொடங்குவதற்கு மாணாக்கர்கள் ஏற்படும் சிரமம் மற்றும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் ஏழை எளிய மாணாக்கர்களின் நலன் கருதியும், பல்கலைக்கழக வளாகத்திலேயே நேரடியாக இந்தியன் வங்கி கிளை மேலாளர் மற்றும் அதிகாரிகள் வருகை தந்து புதிய வங்கிக் கணக்கு துவங்க உதவி செய்ய முன்வந்துள்ளார்கள். இம்முகாம் 10.10.2022 அன்று காலை 10.30 மணிக்கு துவங்க உள்ளது. எனவே, மாணாக்கர்கள் அனைவரும் கல்வி உதவித்தொகை பிரிவிற்கு வருகைதந்து இவ்வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் கீழ்க்கண்ட ஆவண நகல்கள் கணக்கு தொடங்க சமர்ப்பிக்க கோரப்படுகிறது.

**18 வயதிற்கு மேல் இருப்பவர்கள்**

1. ஆதார் நகல்
2. பான் கார்டு நகல்
3. பாஸ்போர்ட் சைஸ் போட்டோ-2
4. முன்பணம் ரூ. 500

**18 வயதுக்குக் கீழ் இருப்பவர்கள்**

1. ஆதார் நகல்
2. பாஸ்போர்ட் சைஸ் போட்டோ-2
3. முன்பணம் ரூ. 500

1/10/22

பதிவாளர்

**பெறுதல்**

1. புல முதல்வர்கள்,

2.அனைத்து துறை தலைவர்கள்,

(சுற்றறிக்கையை மாணவ-மாணவிகளுக்கு வகுப்புகளில் தெரிவிக்ககோரப்படுகிறது)

3. விடுதி ஒருங்கிணைப்பாளர்,

4.அனைத்து விடுதி கண்காணிப்பாளர்கள்,

**நகல்**

1. துணைவேந்தரின் நேர்முக செயலாளர்,
2. பதிவாளரின் நேர்முக உதவியாளர்,
3. கிளை மேலாளர், இந்தியன் வங்கி, அண்ணாமலை நகர்,
4. அலுவலக கோப்பு.